# ருவன்வெல்ல பிரதேச சபை
# கேகாலை மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 யூன் 28 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, ருவன்வெல்ல பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ருவன்வெல்ல பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் கைத்தொழில் நிர்மாணிப்பிற்காக கிராமஎழுச்சி பன்முகப்படுத்தப்பட்ட சபரகமுவை, அருனாலோகய, மகநெகும மற்றும் மாகாண சபை போன்ற 05 செயற்திட்டங்களின் கீழ் சபை நிதியத்திற்கு ரூபா 54,649,503 தொகை பெறப்பட்டிருந்தது. இதில் தொழிற்சாலைகளின்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,889 | 3,018 | 129 |
| (ii) | குத்தகை வாடகை | 9,869 | 9,015 | 854 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 388 | 311 | 76 |
| (iv) | ஏனைய வருமானம் | 36,351 | 38,679 | 2,328 |

### 2.2.2 வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

மீளாய்வாண்டின் வியாபார அனுமதிப்பத்திர மற்றும் வியாபார குத்தகை வருமானத்தை அறவிடுவதற்காக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வியாபார நிறுவனங்களை இனங்கண்டிராததுடன் வருமானப் பெறுவனவுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதி மன்றத் தண்டப் பணம் | 8,223,498 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 7,244,850 |

மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தைக் கணிப்பிட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

## 2.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) ருவன்வெல்ல விளையாட்டரங்கிற்கு அருகாமையில் வாகனத் தரிப்பிடத்தை அபிவிருத்திசெய்தல்**

ரூபா 305,245 தொகையான வேலைக் கிரய மதிப்பீட்டில் 2012 யூன் 05 ஆம் திகதி போபெத்த விவசாய அமைப்புகளுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 2012 யூலை 14 ஆம் திகதி வேலை பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. வேலை மதிப்பீட்டிலும் கொடுப்பனவு அறிக்கையிலும் செலவின விடய இல. 02 இன் பிரகாரம் 55 மண் கியூப்கள் 10 கி.மீ. தூரத்தில் வழங்கப்பட்டு மூட்டைகளாக்கப்படுவதற்காக 01 கியூப் ரூபா 4,099 படி ரூபா 225,445 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் சல்லிக்கற்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட இடங்களும் கொண்டுசெல்லப்பட்டு வழங்கப்பட்டிருந்த சல்லிக்கல் அளவும் தொடர்பாக விபரமான கணக்குகள் கோவையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) குப்பைகளைக் குவித்து, தேரிவிட்டு வேறாக்கி திறந்த மற்றும் மூடிய சோதனைப் பசளைக் கூடத்தை நிர்மாணித்தல்**

2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 இன் கீழ் வேலை ஒப்பந்த உடன்படிக்கையில் ஒப்பந்தத்திற்குப் பொறுப்பான சமூக அமைப்புகளுக்கு பாதுகாப்பின்றி முற்பணமாக ரூபா 200,000 தொகையான உச்சளவு தொகை செலுத்தப்பட வேண்டிய போதிலும் இத் தொழிற்பாட்டிற்காக ரூபா 570,000 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 370,000 தொகை கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) சொத்து முகாமைத்துவம்